உ

ஸ்ரீராமசந்த்ரபரப்ரம்ஹணேநம:

ஸ்ரீ

# நரஹரி பத்தன் சரித்திர கீர்த்தனைகள்.

இஃது,

பிரமபீடம், நிஜானந்த யோகீந்திரரவர்கள் மரபிற்குரிய

ஸம்பத்கிரி,

அச்சுததாஸரவர்கள் மாணாக்காரகிய

சதனபுரி

இராமசந்திரகுருஸாமிதாஸரால்

இயற்றப்பட்டு,

விளாங்காடு.

அருணாசலநாயகரது

நன்முயற்சியினுல்

காஞ்சிபுரம் சந்திரபானு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஜயவரு தைமீ

1895.

# சாத்துகவிகள்.

இஃது,

*பிரமபீடம் ஸம்பத்கிரி ஸ்ரீமத்*

## அச்சுததாஸர் அவர்களியற்றியது.

*பொன்னுலகத்திமயவரும்புகலற்கொண்ணாப்*
*பூரணவான்பொருளருளைப்பொருக்துக்தூயோன்*
*பன்னுநரஹரியெனுமாபத்தன்காதை*
*பரிவுடனேதினன்சதனபுரியின்மேவு*
*நன்னுதிசேரினியகுமாந்தகப்பேர்வள்ள*
*னல்கியமாசிற்புதல்வனல்லார்க்கன்பன்*
*றன்னுயிர்போன்மன்னுயிருங்கருதும்ராம*
*சந்த்ரகுருஸாமியெனுஞ்சதுரன்மாதோ.*

*காஞ்சீபுரம் புராணிகர் ம-ா-ா-ஸ்ரீ.*

### சோணாசலமுதலியார் இயற்றிய ஆசிரியவிருத்தம்.

*சகமாந்தருய்யும்வணங்கயிலைபோலுஞ்*
*சயிலமிசைபிரமபீடத்திலேங்கு*
*நிகமாந்தவாக்கியநான்கினுமொன்றோர்ந்த*
*நிசானந்தயோகீந்த்ரனிரோருகத்தாள்*
*அகமாந்தவிசிட்டசிட்டவச்சுதப்பே*
*ராசிரியனருளமுதமருந்தியன்பர்*
*மிகமாந்தசதனபுரிவந்தசாந்த*
*விபவகீர்த்தனைமழைபெய்மேகமன்னன்.*

### வெண்பா.

*இந்த்ரகுருசாமியெனவோங்கியராமச்*
*சந்த்ரகுருசாமிதாசன்மகிழ்ந்து—மந்த்ர*
*விரகரிவண்காதைவியக்கவிசைத்தான்*
*நரகரிவண்காதைநயந்து*

*திருவோத்தூர் ம-ா-ா-ஸ்ரீ.*

### ம. தி. பானுகவி இயற்றிய வெண்பா.

*முத்தமிழின்னாடகமாமூன்றாந்தமிழதனாற்*
*சுத்தநரகரிகதைசொல்லினானித்தரையில்*
*நல்விராமச்சந்திரநற்குருசாமீதாசென்*
*றெல்லாருஞ்சொல்நல்லோனீண்டு.*

*மாகறல் தமிழ்ப்புலவர் ம-ா-ா-ஸ்ரீ.*

### கார்த்திகேயமுதலியார் இயற்றிய வெண்பா.

*தாசகுணராமசந்த்ரகுருசாமிவேள்*
*காசினரகரிகாதைநலம்—பேசினான்ல்*
*நேசதனமெக்நாளுநிற்குஞ்சதனபுரி*
*வாசதனசெங்கோன்மகன்.*

உ

ஸ்ரீராமசந்திரபரப்ரம்ஹணேநம:



# ஸ்ரீ நரஹரிபத்தன்
# சரித்திர கீர்த்தனை.

## காப்பு. விருத்தம்.

அண்டரியாரும்போற்று மரிநரஹரியிணையங்
தொண்டரியாருங்காணத் தொலைத்திருண்மலத்தைநீக்கி
யொண்டரித்திரியிற்போத முதவியகதையையோதப்
பண்டரிபுரிகோபால பாலன்பொற்றுள் காப்பாமே. (1)

## 1-வது கீர்த்தனை இராகம் நாட்டை ஜம்பைதாளம்.

### கண்ணிகள்.

1. ஜயஜயரமாரமண ஜயமுராஸுரதமன
ஜயகனகலுஷசமன ஜயகருடகமன

ஜயஜயா.

2. ஜயஸுந்தராகார ஜயமேருநகதீர
ஜயஸுகுணகம்பீர ஜயஸுராதாரா

ஜயஜயா.

3. ஜயராஜராஜேந்த்ர ஜயவரதயாஸாந்த்ர
ஜயபாலிதஸுரேந்த்ர ஜயராமசந்த்ரா

ஜயஜயா.

## ஸ்ரீகுருமூர்த்தி வணக்கம்.

### விருத்தம்.

ஸச்சிதானந்த ஸாகரனாகிய
வச்சுதானந்த வாரியனாரடி
யுச்சிமேற்கொண்டுவகையினோடிந்த
நற்சரித்திர நானுரைசெய்வனால். (2)

2-வது. கீர்த்தனை இராகம் காம்போதி அடதாளம்.

### பல்லவி.

குருவே குருவே யருள்
குலவுஞ்சுரதருவே
கோதிலாதவெம் மாதிரகுபதி
பாதமலரையெப் போதுந்துதி.

குருவே.

### அநுபல்லவி.

அரியசரியைகி ரியைகணனியாற்றிப் போற்றி
அமலயோகிய ரவையணுகியிய
மாதியோகங்க ளறிந்தசய.
குருவே.

### சரணங்கள்.

1. ஸாதனநான்குக் தேர்க்தோனே வரநிஜானந்தனைச்
சார்ந்தருண் ஞானமோர்க்தோனே
மாதனமாகவுனதடி யேதினம்ராமசந்திர
னோதும்படிக்கரு ளாததருளன்று
பூதலத்திற்கதி யேதுமின்று.
குருவே.

---

## ஸ்ரீ அரிஹர ரடியார்கள் வணக்கம்.

### விருத்தம்.

நரஹரிசரிதையைநலமுடனறைவான்
வரசுககாரத வாயுஸுத பரா
சரமிருகண்டத நயனாதி யரா
மரிஹராரடியவ ரடிதொழு வேனே, (3)

3-வது. கீர்த்தனை இராகம் தோடி ஆதிதாளம்.

பல்லவி.

பக்தஜன சேகரரே பாபாந்தவி பாகரரே

பக்த.

அனுபல்லவி.

முக்தராயெங்கும்படர்ந்த மோகசாகரங்கடந்த

பக்த.

சரணங்கள்.

1. ஞானவீனரா யோயாது
நமனுக்கா ளாவார்மீது
வானம்போன் றருளாமாரி
வந்துபெய்தா ளும்புராரி.

பக்த.

2. அரிஹர ரூபமொன்றாய்
அறிந்தமெய்ஞ் ஞானநன்றாய்
நரவரர்க் கோதுமோன
ராமசந்த்ர தாஸரான.

பக்த.

## ஸ்ரீ சீதாபிராட்டியார் வணக்கம்.

விருத்தம்.

மின்னையொத்தவடானுகி மேகமொத்திலங்கிராமன்
றன்னையுற்றருளாமாரி தாஸர்பைங்கூழ்மேற்பெய்யு
மன்னையாஞ்சீதாதேவி யடியிணைமுடியேற்கொண்டு
நன்னயமுடனேயிந்த நரஹரி கதைசொல்வேனே. (4)

4-வது, கீர்த்தனை இராகம் ஆதிதாளம்.

பல்லவி.

வரந்தரு வாயே
வருவாயேநானுன் சேயேன்றாயே. வரம்.

அநுபல்லவி.

இரந்தவரு நல்ல
நரஹரி காதைசொல்ல

வரந்தரு.

சரணங்கள்.

1. சருணுரிதியா முன்னேக்
சருதியேத் திடுமென்னே
யருட்கவியாய்ச் செய்ய
வன்புடனென் றன்பனைய.

வரந்தரு.

2. பொருவிலாத நன்னேக்கும்
புகழும்பா வாணர்வாக்கும்
வருவதெவ் வாறென்று
வருந்துமென் ஞவினின்று.

வரந்தரு.

3. அசமகிழ்வாயென் றொல்லே
யகற்றுவா ராருமில்லே
ஸகலார்த்த தாயகி
சதனபுரி நாயகி.

வரந்தரு.

## வழிபடுகடவுளாகிய

## ஸ்ரீராம பரப்பிரம்ஹ வணக்கம்.

விருத்தம்.

நவமதனன் றனேயெனதையனேயென் ருயை
நாடியெனேயாண்ட குருநாதன் றன்னே
யவமதனேயகற்றவெனதறிவானனே
யதுலிதஞானவனிகட்கப்பாலானேத்
தவமதனேப்புரியுமடியாருட் டேனேத்
தனிவானேச்சதனபுரிதனில்வாழ்வானே
யுவமயிலிராமனெனுமெழிற்பேரானே
யுளங்குளிரத்தொழுதிதனேயுரைசெய்வேனே. (5)

5-வது. கீர்த்தனே இராகம் தர்ப்பார் அடதாளம்.

பல்லவி.

அருள்செய் யையா
ஐயாகோதண்ட கையா
ஆவலுடனுன் றய்ய
சேவகனு யுய்ய.

அருள்.

அநுபல்லவி.

தெருளுறுமறைநான்குந் தேடும்பதாரவிந்தா
தீனஜனானந்த தேவதேவமுகுந்தா

அருள்.

சரணங்கள்.

1. பகைத்தனதடியார்மேற் பழிமொழிந்திடும்பாவி
பாவாணரையடித்துப் படியாதமூதேவி
நகைக்கிடமாகும்பேய் நாயினைப்போற்கூவி
நாடித்துதிக்குமென்ற னாவிலினிதுமேவி

அருள்.

2. இணையிலாப்பெரியோர்முன் னேதுக்கிந்தவினோதம்
என்றிருந்தாலுமென் னிதயமுனதுபாதம்
அணையும்பேராசையா லாடுகின்றதுபேதம்
அணுவளவேனுங்கொள் ளாமலமலபோதம்

அருள்.

3. புலிக்கோவின்றோலைமேற் போர்த்தாலதென்னசாரம்
புல்லியனானுன்னைப் போற்றவுமுண்டோதிரம்
சலிக்குமெனதுநெஞ்ச நிலைக்கச்செய்வதுன்பாரம்
சதனபுரியிராம சந்திரனேயிந்நேரம்

அருள்.

---

## அவையடக்கம்.

விருத்தம்,

எழிலுறுஞ்சுரலோகத்திலிலங்குமாமராளமுன்ன
ரழுனாற்காகந்தானு மதனடைநடந்துபார்த்த
விழிவுபோற்பொருவிலாத விருங்கவிவாணர்முன்னே
பழியுறுமெளியனேனும் பதறியீதுரைக்கின்றேனே (6)

6-வது கீர்த்தனை இராகம் ஆனந்தபைரவி திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயரே கவிவல்லோரே யடியேனையாட்கொள்வீரே
ஐயரே.

அநுபல்லவி.

பொய்யிலாப்புகழைப்பூணும் புருஷார்த்தங்களைப்பேணும்
ஐயரே.

சரணங்கள்.

1. ஏதுமறியாப்பேதை யியம்புகின்றேனிக்காதை
நீதாமேனும்வையாமல் தெரிந்தாக்ஷேபஞ்செய்யாமல்
ஐயரே.

2. பாச்சிசோச்சியென்றோதும் பாலர்வார்த்தையெப்போதும்
ஏச்சாயாராய்தனன்றோ வெளியேனுமவ்வாறன்றோ
ஐயரே.

3 ராமசந்திரன்பாத ராஜீவமேவும் போத
மேமாறுமற்சீர்சான்ற வென்றனையீன்றதாய்போன்ற
ஐயரே.

---

# கதாப்ராரம்பம்.

## விருத்தம்.

பங்கயபவனைப்பொருவுமாமறையோர்
படிபுகழ்மனுவினேரிறையோர்
துங்கநல்லளகைக்கோனிகர்வணிகர்
தொழும்பறுத்தூயசூத்திரர்கண்
மங்களத்தொனியோடரிஹரிவிட்டலே
மாபதேயெனத்தினம்புகழச்
செங்கலின்மிசையென்னையனுந்திருமாற்
றிகழுமாநகரமொன்றுளதால் (7)

## இதுவுமது:

ஏற்றமாம்பரமன்வைகி யிலங்கியநலங்கண்டண்டர்
போற்றருமநகர்க்குப் பொன்னகரிணையாகாதென்
றாற்றலான்மனிதராக வவணுறைந்திறைஞ்சுமாற்றால்
வேற்றொருநகரதற்கெவ் விதத்தினுமுவமையாமோ (8)

## இதுவுமது,

விரிபுகழ்நகர் விளங்குபண்டரி
புரியெனச்சகலரும் புகலமாண்புள
வரிஹரருன்னத வாலயங்களாற்
றிரிவிதவுலகினுஞ் சிறந்துதோன்றுமால். (9)

1-வது தோரா தரு இராகம் செஞ்சுருட்டி ஆதிதாளம்.

ராமராமா ரவிகுலாம்புதி சோமா சுப நாமா வோ.

1. இவ்விதமகிமையுற்றிலங்கும்பண்டரிபுரி
இனிலொருபொன்செயும்புலவன்
எவ்விதத்தினுங்குறைவின்றியுய்ந்திலக்கிய
விலக்கணங்களைப்பயில்வலவன்

2. சொப்பனத்திலும்பண்டரிநாயகன்பெயர்
சொல்லியுமெண்ணியுமறியான்
தப்பியேனுமொருகாலுமக்கடவுளின்
றலத்தின்வழிச்செலவுங்குறியான்

3. நரஹரிபத்தனென்றனைவருமழைக்குநன்
ஞமதேயம்படைத்திருந்தான்
புரஹாரனுகியமல்லிகேஸ்வரனைப்
போற்றலன்றியெதற்கும்பொருந்தான்.

விருத்தம்.

இந்தவிதமநுதினமும் பிராதக்காலத்
தெழுந்துநரஹரி பீமாநதியிற்றோய்ந்து
விந்தையுடனித்தியகன்மங்களாற்றி
விழுப்பொருளாயாங் கிலங்குமல்லிகேசன்
சுந்தரபாதங்கணறுமலர்கொண்டேத்தித்
தோமறுநற்றூப தீபங்கள்காட்டிச்
சிந்தைமகிழ்ந்தடியற்று நீண்மரம்போற்சாய்ந்து
சேவிப்பான்றிருத்தமுறப்பாவிப்பானே. (10)

7-வது கீர்த்தனை, இராகம் தோடி, ரூபதாளம்.

பல்லவி.

அருட்கண்பாராய் ஐயா வென்ற னருகில்வாராய்
அநுதினந்தொட ரெனதிடர்கெட
வருட்கண்.

அநு பல்லவி.

மருட்குள்ளாயுன் மலரந்தாளென்
மனந்தனிற்சேரா மதியீனனை யதிதீனனை
யருட்கண்.

சரணங்கள்.

1. ஆலைவாயிற்கரும்புபோலே யக்தோவித்தப்புவியின்மேலே
சாலவும்வாடிச் சலித்துன்னைத்தேடிச்
சரணடைந்தேனித் ததியெனக்கினி கதிபுறத்தனி
யருட்கண்.

2. பிறந்துபிறந்திறப்பேனோ பேயனுயின்னமலைவேனே
சிறந்திடுமுத்தி சேர்த்திடும்பத்தி
செனிக்கச்செய்தாளும் சிவசங்கர பவபயஹர
அருட்கண்.

3. செகமெலாம்புகழுந்தூயா ஸ்ரீராமசந்திரஸஹாயா
புகலரும்புகழ் பூண்டெங்குந்திகழ்
பூரணானந்தப் பொருளே கனத்தெருளேயுன
தருட்கண்.

வசனம்.

இவ்வாறு, சிஷ்டஜனசேகரனாகிய நரஹரி, தனதிஷ்ட தேவதையாகிய மல்லிகேஸ்வரஸ்வாமியை யுள்ளங்குளிரப்பூசித்து, விள்ளற்கரிய கவிகளைவாசித்து, நல்லடியாரைப்பூஷித்து, தன்னைப்போஷித்து வருங்காலையில், விண்டலத்தோரும் வியத்தற்குரிய தொண்டர்மிகுந்துள்ளவந்தப் பண்டரிபுரியின்கண்,

விருத்தம்.

நரஹரிவீட்டின்மேற்பா னண்ணுமோர்வணிகன்ருனும்
பெருகியகாலமாகப் பிள்ளையிலலாமன்மாழ்கி
யருளுடனுங்கிலங்கு மாதிபண்டரிநாதன்றன்
றிருவளாலயத்திற் சென்றிவாறுரைசெய்வானே. (11)

8-வது கீர்த்தனை இராகம் செஞ்சுருட்டி ரூபகதாளம்.

பல்லவி.

பரமனேயருள் பாராயொரு பாலனைத்தாராய் வாராய்
பரமனே.

அநுபல்லவி.

திரமாயெங்கும் பரிவாய்த்தங்கும்
தெருளேயின்பப் பொருளேயோ
பரமனே.

சரணங்கள்.

ஐயோநான்செய்வ தவலந்தானே
வருள்வரா தேனே மிகு
துய்யாமலர்க் கையாவெழிற்
செய்யாண்மகி ழையாவோ
பரமனே.

மலடனுயிந்த மகிமேற்பொருந்தும்
மாண்புட னிருந்தும் ஒரு
பலனுயினு மிலனுயிந்த
நிலையோடேநா னலேவேனே
பரமனே.

ராமசந்திரதாஸ போஷா
ரவிகுல பூஷா பரந்
தாமாமல நாமாஸுர
பீமாமுக ஸோமாவோ
பரமனே.

விருத்தம்,

சத்தியமில்லாவேந்தன் சாந்தமில்லாதயோகி
யுத்தமரில்லாமூதூ ருணர்விலாவேள்வியாளர்
பத்தினியில்லாவில்லம் பாலகரில்லாச்செல்வ
மித்தரைதனக்குப்பார மென்றெலாமியம்புவாரே. (12)

வசனம்.

அன்றியும், "அபுத்ரஸ்யகதிர்நாஸ்தி ஸ்வர்க்கேபி நரகேபிவா" என ச்சாஸ்திரங்களிலுரைக்கப்பட்டிருப்பதோடு, "மக்கண்மெய்தீண்டலுடற் கின்பமற்றவர் சொற்கேட்டலின் பஞ்செவிக்கு" என்றும், "குழலினிதி யாழினிதென்பதம்மக்கண் மழலேச்சொற்கேளாதவர்" என்றும், "குழவி தளர் நடையைக்காண்ட லினிதேயவர்மழலே கேட்டலமிழ்தினினிதே' என்றும் சான்றோர்களுரைத்திருக்கின்றபடியே அடியேனவ்விதபாக்கிய மடையாத மிடியேனுகிவிட்டேன், வீணுக்குழைக்கும் விழலனுகிக்கெட் டேன், புத்திரார்த்தியாகிப்புறப்பட்டேன், ஆதலால்,

1-வது. டோம்ரி தரு இராகம் முகாரி அடதாளம்.

ராமராமராமா ரவிகுலாம்புதிஸோமா ரமணீயதாரகநாமா.

1. ஐயாபண்டரிநாதாவமரரேத்திடும்பாதா
வருமாமறையறியாப்போதா
துய்யபாஞ்சாலியன்றபயமென்றுனேக்கூவத்
துகிலளித்தாண்டநன்னீதா

2. பதிதனுமெனக்கொருபாலனேயளிப்பாயேற்
பகருநால்வகையானபொன்னில்
அதிகமாஞ்சாம்பூநதத்தினுலன்றனுக்
கரைஞாண்செய்வித்ததன்னில்

3. மேலானநவரத்தினங்களும்பதிப்பித்து
மெய்யன்புடனளிப்பேனையா
சாலவுன்றனைநம்பிச்சரணடைந்திடுமென்றன்
சஞ்சலந்தீர்த்தாளுந்துய்யா.

வசனம்.

என்றிவ்வாறுபரிந்து, பிரார்த்தனைபுரிந்து, தனதுத்தமபத்தினியுடனந்தத்தலத்திற்குத்திரிந்து, நிரந்தரமும் வருந்தும்போது, புண்டரீகவரதனாகிய பண்டரிநாயகன்றிருவருளினால்.

விருத்தம்.

பத்திமிகுந்திடுமந்தவணிகன்றேவி
பலநாளும்படுந்துயரம்பறந்துபோக
வுத்தமமாமோரையினிற்கருப்பந்தாங்கி
யுதரமதிபருமிதமாயுகளக்கொங்கை
மெத்தவும்பூரித்துசிலீமுகங்கருத்து
மின்னனையவிடைபருத்துமெலிவுற்றூர்ந்த
பத்தெனுமாதத்திலநாயாசத்தோடே
பரிதிநிகரொருசுதனைப்பயந்தாண்மன்னோ (13)

வசனம்:

அப்போதந்த வைசியோத்தமன் பெருநிதியைக்கண்டபேதைபோலவும், பாயஸான்னபதார்த்தங்களைக்கண்ட பசியாளன்போலவும், சந்திரோதயங்கண்ட சகோரங்கள்போலவும், ஆசாரியன் வரவைக்கண்ட அடியார்கள்போலவும், அபாரமாகிய வானந்தக்கடலிலாழ்ந்து, பண்டரிநாதனடிகளிற் பலதரந்தாழ்ந்து, இனிவாழ்ந்தேனெனச்சூழ்ந்து,

9-வது கீர்த்தனை இராகம் மோஹனம் ஆதிதாளம்.

பல்லவி.

சர்க்கரைவழங்கினனே சகலருக்கும்
சர்க்கரை.

அநுபல்லவி.

துக்கஸாகரங்கடந்து துரிதமாகநடந்து
சர்க்கரை,

சரணங்கள்.

1. சுக்குமிளகேலமாதி சூரணங்கலந்துவந்த
பொக்கைவாய்க்கிழவரெல்லாம் போஜனமிதென்றருந்தச்
சர்க்கரை,

2. அழியாப்பண்டரிபுரி யகந்தோறுந்தாவித்தாவி
வழியேயேகுவோரையும் வாரும்வாருமென்றுகூவிச்
சாக்கரை.

3. உத்தமவமிர்தமுண்ணு மும்பர்கள்வாயும்புளிக்க
ரத்தியாய்ப்பத்தருடனே ராமசந்த்ரனுங்களிக்கச்
சாக்கரை.

விருத்தம்,

காதலாயதன்பின்னும கரணமாதிகளியற்றி
யாதியிற்ருனுரைத்த வரும்பிரார்த்தனேயின்வண்ணம்
மாதவற்கணைஞானன்ருய் மனமகிழ்ந்தளிப்பானெண்ணிப்
பூதலந்தனிற்பொன்செய்யும்புலவர்பாலணுகுவானே (14)

டோம்ரிதரு.

4. பிள்ளேயென்றனுக்கன்பாய்ப்பிரமையகலத்தந்த
பெருமானுக்கணைஞானேச்செய்யக்
கள்ளமில்லாதநல்லுள்ளமுள்ளோரிந்தக்
கடிநகரிடையிலஃனாய

5. என்றனிதயத்திலானந்தமுண்டாகச்செய்தீவோ
ரெதைவிரும்பினுலும்
நன்றியுடனளிப்பேனென்றுரைக்கவிதற்கு
நரஹரியொருவனேசாலும்

6. அவனேப்போலுலகினிலாபரணங்கள்செய்
யறிஞரொவருமில்லேயென்று
விவரமாயாங்கனுபவமுள்ளோரொடுத்தோத
விரைவினிற்றனதில்லிற்சென்று.

வசனம்.

உத்தமமாகிய ரத்தினங்களேயும், மெத்தவுஞ் சிறந்துமின்னுகின்றபொன்னேயும், பத்தியுடனெடுத்து பரவியதட்டினுள்ளடைத்து நரஹரியினிடங்கொண்டுபோய்க்கொடுத்து,

விருத்தம்.

புண்ணியனேநரஹரியேயடியனேற்குப்
புத்திரனில்லாக்குறையாலரைஞானென்று
கண்ணியமாயியற்றுவித்திவ்வூரின்மேவுங்
கருதரியபண்டரிநாதனுக்களிக்க
வெண்ணியதாற்புத்திரனேயெனக்குத்தந்தா
னிணேயறுமோரரைஞாணீபுரிவாயென்னத்
தண்ணிதயமுளவணிகன்முகத்தைநோக்கித்
தலேயசைத்தநரஹரிபத்தனுஞ்சொல்வானே (15)

10-வது கீர்த்தனே இராகம் கல்யாணி ஆதிதாளம்.

பல்லவி.

நானெங்காளேனுங்காணேனே நலமேவவத் தேவனேத்தானே.

நானே.

அநுபல்லவி.

ஏனிங்காளீதென்னுலே யேற்கலாகுஞ்சிவ ஞர்க்கன்பாற்றுவதனுலே.

நானென்.

சரணங்கள்.

1. பண்டரிநாதனுரோ பணிபுரிந்திவாராரோ
விண்டநின்சொல் லேலாது
வேறுதெய்வந்தனேக் கூறுஞ்செய்கையெனக்கேது.

நானென்.

2. இடையளவில்லாதிங்கே யெனேயடித்தாய்நானங்கே
அடியெடுத்தென் றும்வையேன்
அவலமாகவெங்கள் சிவபிரானேயகன்றுய்யேன்.

நானென்.

3. சங்கையாவுந்தீர்ந்துய்ய சதயனுயாளுந்துய்ய
கங்கைவேணியனேப்போலுங்
காமசுந்தரனும் ராமசந்திரனென்ருலும்.

நானென்.

விருத்தம்,

விண்டுவைக்கருதாதுய்யும்விரதமேபெரிதாயென்னுட்
கொண்டுளேனுனுனுலுங் குவலயத்தடுத்தபேரைத்
தொண்டுசெய்வோரைச்சித்தந்துயருறச்செயுமாபாவி
யண்டுவீழ்கதிசேர்வானென் றஞ்சுவேனுதலாலே. (16)

டோம்ரி தரு.

7. வணிகரேகீருசைசெய்தவண்ணமேநான்ருன்
வண்மையாமரைஞாணேச்செய்ய
அணுவளவாயினுமாடங்கமிலேயெங்க
ளப்பாணேயாயிந்தத்துய்ய

8. பண்டரிநாயகனுலயந்தனக்கேகிப்
பரிவாகவவனேயான்பாரேன்
அண்டரொவருமேத்துமல்லிகேஸ்வரனன்றி
யன்னியரிடஞ்சற்றுஞ்சேரேன்

9. ஆதலாலென்றனுக்கடையாளமாயன்னே
னளவினளவுகொண்டுவாரும்
ஏதமில்லாதபொன்னரைஞாணேச்செய்தும
திட்டம்போலீகுவேன்பாரும்.

வசனம்.

என்றிவ்வாறுரைத்த நரஹரியினுரைகளைக்கேள்வியுற்ற முரஹரியின ன்பனுகியவைசியன், ஹரிஹரியெனச்செவிகளைப்புதைத்து, அங்கமெங்கும் பதைத்து அறிந்துமறியானெனத் திகைத்து, அருவருப்போடுநகைத்து,

விருத்தம்.

மணமிகுமரவிந்தத்தின் மருவியமண்டுகேந்தான்
அணுவளவேனுந்தேனி னனுபவமறியாவண்ணம்
பணிவுளவினியோய்நீயிப்பதியினிற்பிறந்துமந்தோ
வினையிலாப்பாண்டுரங்க னினையனென்றறிந்திலாயே, (17)

11-வது கீர்த்தனை இராகம் நாதநாமக்கிரியை ரூபகதாளம்.

பல்லவி.

நரஹரிநா னென்சொல்வேனைய இது
ஞாயமாமோ துய்ய.
நரஹரி.

அநுபல்லவி.

முரஹரிமீது மூர்க்கமுனக்கேது
மூதறிவோரோதியதனி மொழிகளையுணர்ந்திடுமுனக்கினி
நரஹரி.

சரணங்கள்.

1. பன்னுந்தபோதனரின்னுந்தேடித்தேடிப்
பார்த்தறியாப் பரஞ்சோதி—யது
பல்லோர்பலவிதஞ்சொல்லிக்கொண்டாடப்
பரந்தெங்குந் தங்குமநாதி
உன்னுமும்மூர்த்தி யுருக்கொண்டிடுஞ்சீர்த்தி
யொன்றென்றறியாப்பேதம்
உள்ளவர்க்கன்றோ வாதம்.
நரஹரி.

2. அந்நாளிற்கண்ணனானுக்குமெனக்கு
மணுவளவேனும் பேதம்-நன்றாய்
ஆயுங்காலில்லையென்றேயுரைத்தானென்
றரும்பாரதஞ்சொலும் போதம்
இந்நாளிற்பொய்யோவிதையுமறந்தையோ
வெவர்போதனைக்குள்ளாயினை
யேயுனக்கிவ்வித வேதனை.
நரஹரி.

3. சந்ததமேத்துநல்லன்பருக்காய்ச்சர்வ
சர்க்ஷியாமெம்பெருமானே—யாளுஞ்
சிந்தையோடேராமசந்திராதிரூபஞ்
சேரத்துலங்கிடு வானே
மந்தரிந்நீதி மறந்துளருஞ்சேதி
மாமறைசம்மத மாகுமோ
மனமாயைமறைந்தேகுமோ.

நரஹரி.

வசனம்.

பின்னுமந்த ஆதிமத்யாந்த ரஹிதாகண்ட ஸச்சிதானந்தாத்மகமாகிய பரப்ரம்ஹமானது "உருவன்றருவன்றுளதன்றிலதன் றிருளன்றொளியன்றென நின்றதுவே" என்றும் "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்றமெய்ச்சுடரே யெஞ்ஞானமில்லாதேனின்பப் பெருமானே அஞ்ஞானந்தன்னை யகல்விக்கு நல்லறிவே யாக்கமளவிறுதியில்லாயனைத்துலகு மாக்குவாய்காப்பாயழிப்பாயருடருவாய்,, என்றும் "வானாகிமண்ணாகி வளியாகியொளியாகி யூனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க் கோனாகியானெனதென்றவரவரைக்கூத்தாட்டுவானாகிநின்றாயையென்சொல்லிவாழ்த்துவனே,, என்றும் "ஆறு சமயங்கடோறும் வேறுவேறாகி விளையாடு முனையாரறிவர்காண்" என்றும் ஸத்தி னிலக்கணமுணர்ந்த சைவோத்தமர்களும் "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லாவலியுமல்லன் காணலுமாகா னுளனல்லனில்லை யல்லன் பேணுங்காற் பேணுமுருவாகுமல்லனுமாங் கோனைபெரிதுடைத்தெம் பெம்மானைக்கூறுதலே" என்றும் "பாருருவில் நீரெரிகால் விசும்புமாகிப் பல்வேறுசமயமு மாய்ப்ப்பரந்துநின்ற எருருவில்மூவருமே யென்னை நின்றவிமையவர்தங் திருவுருவே றெண்ணும்போது ஒருருவம் பொன்னுருவம் ஒன்றுசெந்தீ யொன்றுமாகடலுருவ மொத்துநின்றமூவுருவுங்கண்டபோதொன்றாஞ்சோதி" என்றும், "யானுந்தானாயொழிந்தானையாதுமெவர்க்குமுன்னோனைத் தானுஞ்சிவனும்பிரமனுமாகிப்பணைத்ததனி முதலை" என்றும் வஸ்துதத்துவமுணர்ந்த வைஷ்ணவோத்மர்கதளும் அநுபூதிபராய்க்கொண்டாட "அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமாயானந்த பூர்த்தியாகி" எனும்வண்ணம், பொங்குங்கருணைக்கடலாயெங்கும் விளங்கும் ஏகஜோதியாயினும் 'சுலோகம், "நதேரூபம் நசாகாரோநாயுதாநிசாஸ்பதம் ததாபிபுருஷாகாரோ பக்தாநாம் த்வம்ப்ரகாசஸே" (இதன்பொருள்) உனக்குரூபமும்ஆகாரமும்ஆயுதங்களும்வாஸஸ்தலமும்இல்லை,அப்படிக்கிருந்தும். பக்தர்களுக்காக மேற்கூறிய ரூபமும், ஆகாரமும், ஆயுதங்களும், வாஸஸ்தலமும், ஆகிய விவற்றைப்பரிக்கிரஹித்து புருஷஸ்வரூபியாய்ப் பிரகாசிக்கின்றாய், அதாவது, பகவானது திவ்யாத்மஸ்வரூபமானது, நாமரூபரஹிதமென்றும், அவ்விதவஸ்துவை ஸாந்நித்

யப்படுத்திக்கொள்வது ஸாத்தியமாதலால் பக்தர்களிடத்து அநுக்கிரஹத்தினால் பகவானனவர் நாமரூபாதிகளோடு கூடியிருக்கின்றாரென்றும். இவ்வித பிரமாணங்களின் படியே, மேற்கூறிய திரிமூர்த்தியாத்மகபரப்ரம்ஹம் இந்த மல்லிகேஸ்வர பண்டரீஸ்வராதி யர்ச்சாவதாரங்களிலும் தனது விபூதியைச்செலுத்திப் பிரகாசியாநிற்கின்றதன்றோ, அன்றெனில் என்று மொழியாவிழிவழக்காய்ப் பொன்றுமளவும் போராடுவது நன்றோ, இவற்றைச்சிறிதுங்கருதாதுபெரிதாகியதுஷ்டஸ்வபாவமுற்று, அங்கேவர இஷ்டமில்லையென்றால், அந்தபரமாத்மாவுக்கு நஷ்டம்யாதேனுமுண்டோ நன்றாயிருக்கின்றதென்று, நல்லவார்த்தைகளைப்புகன்று, அவ்விடம்விட்டகன்று, பண்டரிநாதன் கோயிலுட்சென்று, பக்தியோடு நின்று, திருமருங்குலளவுபிடித்து, நரஹரிகையிற்கொண்டு வந்துகொடுத்து அடியேன் மனங்களிக்க அரைஞாணியற்று மென்றுத்தரமளிக்க.

விருத்தம்.

ஆதிசிவனடிதொழுதீததிவேகத்தி
லாகுகவென்றேகமனத்தவனுகித்தன்
னூதியவான்மையினெடுபெட்டடைகீர்க்காரை
யூதுகுழற்சுத்திகுறடுளவெல்லாங்கொண்
டோதியவண்ணத்திருமான்மருங்கிற்கேற்ப
வொண்மணிகளைக்குயிற்றியுரமாய்ச்செய்து
சோதிபெறும்பொன்னரைஞாணெடுத்தங்கெய்தித்
துணைபிரியாவைசியன்கைதனிலீந்தானே. (18)

வசனம்.

அவ்வேளையிலதைக்கண்ட வணிகன், எவ்வேளையிலுமெய்தாத திவ்வியானந்தந்தேக்கி,இயக்கமுழுதுநீக்கி,நரஹரியினிருகரங்களையும்பற்றி நலமாரவலமாகச்சுற்றி,

12-வது கீர்த்தனை இராகம் காபி ஆதிதாளம்.

பல்லவி.

ஆருனக்குத்தாரணி யிற்சரி
யையா நரஹரி

ஆருனக்கு.

அநுபல்லவி.

சீருறச்செம்பொன் வேலையில்
தேர்ந்தவரிந்தக் காலையில்

ஆருனக்கு.

சரணங்கள்.

1. கற்பவராலுமிதன்முன் கற்றவராலுமிதாமோ
விற்பனனுகியதேவ சிற்பியாலுஞ்செய்யப்போமோ
வாருனக்கு.

2. திக்குகளெங்குந்திகழத் தேசவிசுகின்றதையா
பக்குவிநீயென்றறிந்துன் பாவிநன்வந்ததும்பொய்யா
வாருனக்கு.

3. தோற்றுங்கங்குலுமிதற்குத் தோற்றுவேற்றிடமொளிக்கும்
சாற்றும்பண்டரியிராம சந்திரனுளங்களிக்கும்
ஆருனக்கு.

வசனம்,

என்றிவ்வாறுகோஷித்து, நரஹரியைப்பூஷித்து, அனேகசம்மானங்களைத்தந்து, ஆபரணத்துடன் றனதகத்திற்குவந்து, நல்லதினத்தைநாடி நண்பர்களுடன் கூடி, நாராயணஸங்கீர்த்தனம்பாடி நர்த்தனமாடி,

தோரா தரு.

4. மங்களவாத்தியமுழங்கமனைவியொடு
மாதவன்சந்நிதிக்கேகி
யங்குவிளங்குஞ்சங்காழியங்கையனு
மையனுக்கதிகவன்பாகி

5. பாலும்பழமும்பரிமளதிரவியங்களும்
பலநதிச்சலங்களுஞ்சொரிந்து
சீலமுடனேயபிஷேகமியற்றிச்சகஸ்
திரநாமார்ச்சனைபுரிந்து

6. ததியோதனமும்பொங்கலும்புளியோரையுந்
தகுமிளகோரையும்படைத்து
நதிபோற்சலம்பெருகிடவளவில்லா
நாரிகேளங்களையுடைத்து

7. தூபதீபதாம்பூலாதிகளாந்
துலங்குபசாரங்களாற்றி
சீபதிபண்டரிபூபதியுன்திரு
சேவடிகதியெனப்போற்றி

விருத்தம்.

அணையிலாக்கருணைவாரி யாகியன்பரையாட்கொள்ளுந்
திணிபெறுந்திகிரியானைத் தேவதேவனைச்சார்ந்தந்த
விணையிலாவளைஞாண்டன்னை யிருகரத்தாலுமேந்திப்
பணிவுகூர்ந்திடையின்மீதிற் பத்தியோடணியும்போதில்,

வசனம்.

அங்குசூழ்ந்துவிளங்காநின்ற அத்தியந்தபத்தியையுடைய வடியாருள்ளத்திலாச்சரியம்பெருகவும், அணிந்தவணிக லகமுருகவும், அன்னியனுகவெண்ணிய நரஹரி தமதுசந்நிதிக்குவருகவும் அபேதஞானம்ருதம் பருகவும், தமதுதிருவுளத்திற்பெரிதுஞ்சங்கற்பித்து, பிரியமதிசயித்து,

விருத்தம்.

பேரிரண்டாமன்றென்னப் பேதாபேதங்களோது
மோரிரண்டடியாருள்ளத் துறுதியைப்பரிசோதிப்பான்
பாரிரண்டேழுங்காக்கும் பண்டரிபுரிநிவாச
னீரிரண்டங்குலந்தன் னிடைபருத்திடச்செய்தானே. (20)

வசனம்.

அதனாலந்தவரைஞாணனது, மதனகோடிசுந்தரனும், மணிமயமாலாலங்க்ருதகம்புகந்தரனும், மௌனிஜனேத்பல சந்திரனும்,கபடநாடகனும், கனபூட்டகனுமாகிய தன்னிடைக்கு முன்னுளையில்யசோதாதேவி பிணிக்கத்துணிந்த கயிறுனது துணிக்கையாகவேபற்றுமற்போனதுபோலே,

தோரா தரு.

8\. அளவுகுறைந்துதவாவிதந்தனதுளத்
தறிந்தவணிகன்மிகவேங்கிக்
களவிதிலேதெனக்கண்ணீருகுத்துத்தன்
கையிலவ்வரைஞாண்வாங்கி

9\. நரஹரிவாழுமில்லந்தனக்கேகியென்
னுணமுன்னுலழிந்தேனே
அரிஹரியானினியென்னசெய்வேனென
வனைத்தையுமெடுத்துரைப்பானே.

13-வது கீர்த்தனே இராகம் செஞ்சுருட்டி ஆதிதாளம்.

பல்லவி.

இதுபோதாமற்போத லேதையா.

இது.

அநுபல்லவி.

சதியேதோவெனக்கதைநீதியாயோதைய.

இது.

சரணங்கள்.

1\. அடியேனெண்ணம்போல் அமைத்திந்தநின்மேல்
கொடிதாம்பிழைதனைக் கூறுவாரானாயோ

இது.

2\. அன்பிலாதபாவி யாகுமென்றனுவி
துன்பமேவத்தானே துணிந்திதைச்செய்தேனே

இது.

3\. ஜகமீதிராம சந்திரான்றன்னும
மகத்திற்கொண்டோத லருளேயறியாத

இது.

விருத்தம்,

உருகியிவ்வாறுவைசியோத்தமனோதும்போது
நரஹரிமனம்பதைப்பாணியவ்வளைஞாண்வாங்கிச்
சரிவரப்புரிந்திப்போதுசடுதியிற்கொடுபோமென்னப்
பரிவுடனடந்துமுன்போற்பரமனுக்கணிந்திட்டானே. (21)

வசனம்,

அப்போது எழின்மிகுந்தவந்தவரைஞாணனது, இந்திரேசனிடைக்கு இரண்டங்குல மிகுதியாயிருந்ததைக்கண்டு, ஏக்கங்கொண்டு, மீளவு நரஹரிவீட்டிற்குவந்து, மெத்தவுமுனிந்து,

14-வது. கீர்த்தனை இராகம் அபரூபம் ஆதிதாளம்,

பல்லவி.

ஐயையோநா னென்செய்வேன்
அவனியிலெவ் வாறுய்வேன்.

ஐயையோ,

அநுபல்லவி.

பொய்யனென் றனைவரும்புகலப்
புண்ணியமகலப் போகுமோ.

ஐயையோ.

சரணங்கள்.

1. பத்திபோதாதோ பரமன்செய்சூதோ
வித்தையுமெனதுகீதோ விதுவேதோவோதுவாய்.

ஐயையோ.

2, பலமுறையோடிப் பரிந்துன்னைத்தேடி
யலையிற்றுரும்பதுபோலாடி யசம்வாடி நாடினேன்.

ஐயையோ.

3. ஜகம்புகழ்ராம சந்திரனும
மகத்திற்கொண்டுமிப்படியாமா வருள்போமாகேமமா,

ஐயையோ.

விருத்தம்.

எத்தனைமுறையோவிதனைநீபுரிந்து மெம்பிரானிடையினுக்கேனோ
சத்தியமாகப்பொருந்துதலின்றிச் சலித்துனையடுத்தனனதனாற்
பத்தியாய்நீயேஸங்கிதிக்கேகிப் பரிவுடனளவெடுத்தரைஞா
ணித்தகியேனுமொத்திடப்புரிவாயெனநரஹரியியம்புவனே (22)

வசனம்.

ஐயா வைசியோத்தமரே இதேதுதொல்லை என்றூற் சிறிதுங்குற்றமில்லை, அந்தோ, "அரசமரத்தைப்பிடித்தசனி யதன்கீழ்ப்பிள்ளையாரையும்பிடித்தது" என்பதுபோல உம்மைப்பிடித்தவாதை யென்னையும்பிடி

த்துக்கொண்டதே அஹராவென்றேங்கி, அரைஞாணை வாங்கி, மீளவு மளவுதவறுமற்பிடித்து, மேன்மையாகச்செய்து கொடுத்து, போகவிடுத்த போது.

தோரா தரு.

10. இனியாயினுஞ்சரிப்படுமெனவணிகனு
மெண்ணிச்சந்நிதியினிற்சேர்ந்து
வனஜநயனனிடையினிற்றரித்திடவது
வசப்படாதவிதமோர்ந்து

11, என்சாணுடம்பொருசாணுடம்பாய்ச்சிர
மிறங்கித்தன்கரங்களைப்பிசைந்து
கண்ணீராறுய்ப்பெருகிடத்தரையினிற்
கடகடவெனப்புரண்டசைந்து

12. ஐயோபண்டரிநாதாவென்றனை
யாதரித்திடலாகாதா
பொய்யோநானுனைப்பூசனைபுரிந்தது
போதும்போதுமலர்ப்பாதா

13. சோதனைசெய்வதடாதருள்செயுமெனத்
தொழுதெழுந்தவ்விடமகன்று
பூதம்பிடித்தவன்போனரஹரியகம்
புகுந்தவனெதிரினின்று,

வசனம்.

ஐயையோ கடுகளவேனுங்காருண்யமில்லாத விடப்பாம்பு போன்ற வெய்யனே, வீண்வேலைசெய்யும் பொய்யனே, உன்னைமெய்யனென்றெண்ணி, மிகவுமன்புபண்ணிக் கையிலுள்ளபொன்னைக்கவிழ்த்துக்கொடுத்ததிதற்குத்தானோ இனிநானிவ்வுடலோடிருப்பேனோ வென்று வர்த்தகன் மெத்தவுமெலிந்தழுவதைப்பார்த்து, சித்தவைகல்யந்தீர்த்து,

விருத்தம்.

அன்புடனெனையடுத்த வாருயிர்த்தோழனேயான்
பொன்செயும்புலவனல்லாற் புல்லியனன்றேயுன்ற
னன்மனந்துயரமெய்த நானளவறச்செய்வேனோ
கன்மனக்கசடர்மேவுங் கடுநரகடைவேனையா, (23)

டோம்ரி தரு.

10. புரிந்துபுரிந்தெனதுபுந்தியுஞ்சரங்களும்
புண்ணாகிப்போயினபாரும்
தெரிந்தவரையிலின்னந்தேற்சியாய்ச்செய்நீவேன்
றியக்கங்கொள்ளாமற்போய்வாரும்

11. என்றந்தவரைஞானியமையாமற்பார்த்துபார்த்
திதயஸம்மதமாய்ப்புரிந்து
நன்றுகுமென்றந்தவணிகன்கையினிலீய
நரஹரியைவிடுத்துப்பிரிந்து

12. பண்டரிநாதனுக்கணியவெப்போதும்போற்
பற்றுமற்போனதனுலே
கண்டித்தபெரியபூருகமென்னப்புவிமீதிற்
கலங்கிவீழ்ந்தெழுந்தினிமேலே

13. கொடும்பாவியானநானென்செய்வேனெனவேங்கிக்
கூக்குரலுடனோடியோடிப்
படும்பாடதனைத்தீர்த்துபாலிப்பாயெனமீளப்
பரிவாய்நரஹரியைநாடி.

வசனம்.

பழயபடியேபற்றுதசங்கதியைச்சொல்லியும், பண்டரிநாதனிடம் புல்லியும், ஐந்தாறுமுறைநடந்தும், அல்லலடைந்தும், அந்தவரைஞானது அவ்விருவருக்கும் புரிந்தது பெருநாளுகவேயிருந்ததைக்கண்டு பிரமைகொண்டு, வர்த்தகன், மெத்தவுந்துரிதப்பட்டு, நரஹரியினிருகரங்களையுந்தொட்டு, ஆலிங்கனம் புரிந்து, அன்பின்கண்ணீர் சொரிந்து.

விருத்தம்.

ஆலசியஞ்சற்றேனுமாகாதாகாதெங்கேனுங்
காலைச்சுற்றியபுயங்கங்கடியாமற்போவதுண்டோ
சாலவுங்கருணைகூர்ந்துஸங்கிதிக்கினிவாராயேன்
ஞாலத்தென்னுயிர்போமென்றேநடுங்கியீதுரைசெய்வானே.

15-வது கீர்த்தனை இராகம் ரீதிகௌளம் தாளம்.

பல்லவி.

வாருமையா வாருமையா
வாருமையா.

அநுபல்லவி.

ஆருந்துணை காணேனையா
வாருமையா.

சரணங்கள்.

1. ஓடியோடி யுடலம்வாடி
நாடியுனையடைந் தேனையா
வாருமையா.

2. நீவாராமல் நிஜமோராமல்
ஆவதேதுரை செய்யா யையா
வாருமையா.

3. கொடிதாமென்றன் குறையாலுன்றன்
அடிமீதிற்ருழ் கின்றேனையா
வாருமையா.

4. பாமரன்மேல் பக்ஷமிலேயேல்
ராமசந்திரனைப் பாரையா
வாருமையா.

வசனம்.

அரிதாகிய தனது விரதத்திற்குப் பெரிதுந்தடை நேரிட்டு பேசற்கரியதுயர மேலிட்டு, வேறுவழிகாணுமல், விவரம்யாதுந்தோணுமல், இவ்வாறுஅவசரப்பட்டழைக்கின்ற வர்த்தகனுரைகளைச்சிவபக்தனுகிய நரஹரி செவியிற்புகட்டிய நாராசம்போற்கொண்டு சிந்தைமருண்டு.

16-வது கீர்த்தனே இராகம் சாமா ரூபகதாளம்

பல்லவி.

ஐயையோசிவனே யாதித்தில்லையானந்தத்தாண்டவனே
ஐயையோ

அநுபல்லவி.

வையகத்துன்னே வணங்குமடியேனே
வாராப்பெருந்துயர் சேரவாளானேனே
ஐயையோ.

சரணங்கள்.

1. பலமுறைபுரிந்தும் இவனிந்தப்
பணிகொண்டுதிரிந்தும்
அலேவுற்றென்னே யடுத்தழைக்கின்ருனே
யன்னியதெய்வநா னெண்ணியறியேனே
ஐயையோ.

2. குற்றமில்லாதிருந்தேன் எவருமோர்
குறைகூறிற்பொருந்தேன்
அற்றைநாளீதென்னு லாமெனவிண்டேனே
யாழமறியாமற் காலிட்டுக்கொண்டேனே
ஐயையோ.

3. ஆமிதாகாதென்றே சற்றேயோசி
யாதநினுவின்றே
சாமியுனேவிட்டுச் சலிப்புடன்ராம
சந்திரன்கோயிலேச் சார்ந்திடவும்போமா
ஐயையோ,

வசனம்.

ஆஹா, இந்தவவனியின் கண்ணனந்தம் பேர்களிவ்வாறே அளவெடுத்துவருவதில்லையா அளவில்லாவாபரணங்களைச் செய்துதருவதில்லையா, அதனாலரியபுகழைப்பெறுவதில்லையா, இதென்னதொல்லையாயிருக்கின்றதே, "அங்குந்தப்பி யிங்குந்தப்பி யகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிப்பத்தன்" என்பதுபோல புரஹரனையன்றி யொருதெய்வத்தையுந் தரிசியாதிருந்தயான் இந்தவணிகன் செய்யும்வாதையால் முரஹரன்கோயிலுக்கேக முடிந்ததே, இல்லாததெல்லாமென்றலையில் விடிந்ததே, என்றுதன்னைத்தான்றாவித்துக்கொண்டு, முன்னின்றவர்த்தகனைக்கண்டு,

விருத்தம்.

வழுவிலாவெனையிழுக்க வந்தவைசியரேயின்ன
மழுதுநொந்தாலும்பிள்ளையவளேபெற்றாகவேணும்
பொழுதுபோமுன்னமேநாம்போய்வரனலமானாலு
முழுமனத்துடனானதுமொழிகளைக்கேளென்பானே. (25)

வசனம்.

இனியெந்தத் தந்திரமுமெனது புந்தியிற்புகவில்லையாதலால் அந்தப் பண்டரிநாதனைப்பாராதிருத்தற்காக, இந்தவஸ்திரத்தினாலென்னிருவிழிகளையும் பந்தித்துக்கொள்ளுகின்றேன் சந்தடியின்றிச்சடுதியிற்கொண்டுபோய்ப், பண்டரிநாதனண்டையில் விடுவீராகில், அவனிடையினளவை விடாமற்பிடித்து, உமதிஷ்டத்தைமுடித்துவிடுகின்றேனென்றுகூறி, இதயகலக்கமீறி, இதுவேயோசனையெனத்தேறி,

17-வது கீர்த்தனை இராகம் தோடி ஆதிதாளம்.

பல்லவி.

கட்டிக்கொண்டானே தன்கண்களை—யிரு
கரத்தா விலங்கிய வத்திரத்தாற்.
கட்டிக்.

அநுபல்லவி.

மட்டில்லானந்தசிவ மனிதனெனமருண்டு
மதியில்லார்தங்கண்களை—மறைக்குமாறிவனுளம்வெருண்டு.
கட்டிக்

சரணங்கள்.

1. நவிலுங்கலைகளெல்லா நன்கோதி
நல்லோர்மனம்புண்பட நடந்தாதி
யுவமமிலிந்துமதத் துறுதியில்லாதெழும்பி
யொழிந்தபுறமதத்தி லழுந்திடுமெவரைப்போற்குழம்பிக்.
கட்டிக்.

2. இந்தவணிகனென்னை யேனடுத்தான்
எழிலனைஞாணியற்று மெனக்கொடுத்தான்
அந்தோவிப்படிவர லறியாமற்போனேனின்றே
அரஹராகங்காதரா புரஹராவருள்புரியுமென்றே.
கட்டிக்.

3. போதும்போதுமிந்தவற் புதநன்று
புவியிலெங்கணுங்காணப்போமோவென்று
சாதுஜனங்களெல்லாஞ் சலித்தப்புறமிடையச்
சாற்றும்பண்டரியிராம சந்திரனிடந்தனைத்தானடையக்.
கட்டிக்.

விருத்தம்.

இப்பரிசாய்க்குகையிலுறுங்கூகைமான
விருகேத்திரங்களிருண்மேவமூடிச்
செப்பரியமாற்சரியத்தொடுதன்கையைத்
தீண்டியழைத்தேகெனவைசியனுக்கோத
வப்பரிசாயன்னவனுங்கரத்தைப்பற்றி
யழைத்தேகவந்நெறியிலவனைக்கண்ட
விப்பிராதியராகும்பலருங்கையை
வீசுவாரகங்குழையப்பேசுவாரே. (26)

18-வது கீர்த்தனை இராகம் ஆதிதாளம்.

பல்லவி.

பாரின்மேலிவ் வாறுமிருப்—பாரோ ஐயோ.
பாரின்.

அநுபல்லவி.

சீரியராயெல்லாந் தேருந்தீரருள்ளையோ.
பாரின்.

சரணங்கள்.

1. பண்டரிநாதனெழிலைப் பார்த்துபார்த்திந்த
வெண்டிசையோரிற்கை யேந்தாரில்லையே யையோ.
பாரின்.

2. சிவனடியாரும்பரிவாய்ச் சேருவார்கள்கே
சவனடியாருஞ்சேருவாரீ தோராரையோ.
பாரின்.

3. கந்தமலர்மேற்றிருவோ டிலங்கும்ராம
சந்திரன்றனக்கீதுந்த குந்ததோவையோ.
பாரின்.

வசனம்.

ஆஹா, நாம், என்றேனுங்கண்டுங்கேட்டு மறியாதவிந்தவதிசயம் நன்ருயிருக்கின்றது, பித்தரோகியானவனுக்கு மெத்தவுமினியபதார்த்தங்கள் இத்தியாவண்ணம், இந்தமத்தனுக்கும் பண்டரிநாதனைக்கண்டுகளிக்கக் கசப்பாயிற்றே, கடுகளவுமவன்மேற் கருத்தில்லாமற்போயிற்றே, என்றெல்லோருந்துயர்க் கடலிலாழ்ந்து, நரஹரியைச்சூழ்ந்து, செல்லச் செல்ல மெல்லமெல்ல.

விருத்தம்.

குறுநடையுடனடந்து கோயிலிற்புக்கியோகோ
வெறியிதேதிவனுக்கென்றவ் விடத்துளோர்வியந்துரைப்ப
வறிவுசோர்ந்தரஹராவென் றருவருப்புடனுங்கெய்து
மறுவிலாப்பாண்டுரங்கன் மருங்குலைத்தடவுவானே (27)

டோம்ரி தரு.

14. அளவெடுத்திடவிவ்வாறணுகித்தடவுமெல்லே
யரிநரஹரியையம்போக்க
வுளமிசைத்தருளோடேயுவற்மிசிவனுந்தானு
மொன்றென்னுமறிவையுண்டாக்க

15. பாதகத்தவராகும்பேதவாதிகளெல்லாம்
பணிந்தாஹாவெனவாயைமூட
எதுரைசெய்தாலுமிணங்காவுயிர்ப்பிணங்க
விதயமிதையறிந்துவாட

16. பெருகியதிருமண்ணுற்பிறங்கும்வைணவரெங்கள்
பெருமானிவனெனுஞ்சொற்சோர
திருநீறணியுஞ்சைவர்தீயரென்றுரைசெய்யுந்
தெருளில்லார்மருளெல்லாந்தீர.

19-வது கீர்த்தனே இராகம் கமாஸ் ரூபகதாளம்.

பல்லவி.

பரமசிவாகாரமாகினு னிப்பாருள்ளோரு மாருந்தேரும்
பரம.

அநுபல்லவி.

திரமுறத்தோத் திரம்புரிந்திடுக்
திண்ணியனுகியநரஹரி யெண்ணியமருளறமுரஹரி
பரம.

சரணங்கள்.

திங்களிலங்குஞ்செஞ்சடாடவி செறிந்தளவிலாச்சீருடன்றன்னத்
திகழெழிற்பஞ்சமுகங்களும்பஞ்ச தினகரரெனப்பன்ன
மங்களந்தரும்புயமிசைப்பெரு மாசுணப்பூணாற்றேசுடன்மின்ன
மான்மழுத்திரிசூலம்புலித்தோன் மணிக்குண்டலங்கண்மன்ன
மாமணமுறுந் தோமறுகொன்றைத்
தாமமுடனி ராமயத்தய்யன்
காமனைக்கஞ்ச பூமனையருள்
ராமசந்திர னாமெனதையன்

பரம.

விருத்தம்.

இந்தவிதந்தோற்றுதலும்பரமானந்த
விருங்கடலிலழுந்தியெழுந்திவன்றானென்னே
கந்தமலர்த்திருவின்மணவாளனென்றே
கருதியிருந்தேனெனதுகரங்கட்கிப்போ
தந்தமிலானந்தசிவாகாரந்தோற்ற
லதிசயமீததிசயமென்றாடிப்பாடிப்
பந்தனஞ்செய்திருவிழியுமறைத்திருந்த
பாரியவஸ்திரமவிழ்த்துப்பார்த்தான்மன்னனே (28)

வசனம்.

அப்போது, முன்னந்தானன்னியராற் கேள்வியுற்றிருந்தவண்ணமே எண்ணரியபுண்ணியம் புரிந்த தனது கண்ணிணைகளுக்குப் பன்னகசயனனாகிய வென்னையன், பின்னமின்றிப்பிறங்கிப், பேரன்புடனிரங்கி.

20-வது கீர்த்தனை இராகம் பிலஹரி ரூபகதாளம்.

பல்லவி.

மாயனானே மன்னுந்
தூயனானே யென்கோனே

மாயனா.

அநுபல்லவி.

ஓயாமற்புகழ் தூயாருட்டிகழ்
வோனே தானே

மாயனா.

சரணங்கள்.

1. மாமகுடமார்த்தாண்டன் போன்மின்ன
மகரகுண்டலந் தகதகவென்னத்
தோமாருந்துட்ட ராமாமென்றெட்டத்
தோனான் கானான்

மாயனா.

2. மாசிலாக்கவுத்துவ மணிக்கோல
வைஜயந்தி வனமாலையுஞ்சாலத்
தேசாரத்துங்க வாசாரம்பொங்கச்
சீராய் நேராய்

மாயனா.

3. பாரியபீதாம்பர மிடைவீக்கிப்
பரவும்ராமசந் திரனெனத்தேக்கி
யீரேழுலகும் போதிலகும்
எம்மான் பெம்மான்

மாயனா,

வசனம்.*

இவ்விதவினோதசின்னங்களோடுங், கடின்யஸ்தஹஸ்தங்களும், ஸமசரணங்களும், பிரகாசிக்கச்செங்கல்லாகிய பீடத்தின்மீதுசங்கஹஸ்தனாகியெழுந்தருளியிருக்கும் பங்கயபாதனாகிய பண்டரிநாதனை இட்டமில்லாமற்கண்டு, எனக்கேனிந்தத்துட்டப்பிரமை வந்ததெனமருண்டு தனதுவிரதபங்கத்திற்குவெருண்டு, தரையிற்புரண்டு, மீளவுந்தனது கண்களுக்கு வஸ்திரத்தைச்சுற்றிச், சுவாமியினிடையைப்பற்றித், தைரியம்விடாது தடவிப்பார்க்கும்போது.

விருத்தம்.

அடைவுடனேபூருவம்போற்சிவசின்னங்க
ளகப்படலுந்திகைத்தநரஹரிக்கவ்வேளை
கடியபிறவிக்குருடற்கிரண்டுகண்ணுங்
களங்கமறத்துலங்கியுளங்களித்தாற்போலத்
திடமுறஞானோதயமாயயர்ந்தோவுன்
திருவிளையாட்டெவரறியுந்திறத்தோரென்றே
சுடர்முடியெம்மடிகளடிமுடிமேற்சூட்டித்
துடிக்கின்றானேதேதோபடிக்கின்றானே. (29)

21-வது. கீர்த்தனை இராகம் தோடி ரூபகதாளம்.

பல்லவி.

காணலானேனே நானே. காண,

அனுபல்லவி.

தோணருந்தேனே வானே. காண.

சரணங்கள்.

1. வீணாமபி மானமேவி
வெறியேனாகித் திரிந்திடும்பாவி
கோனாதய்யக் குருவாய்த்துய்யக்
குறியளித்தோனே கோனே. காண.

2. கனவினுமுன்னைக் கருதாதந்த
காரமாம்பெருங் கடலிற்கிடந்த
வெனையழைத்தாள விடசெல்லாமாள
வேதுசெய்தேனே நானே காண.

3. தெரிவரும்வேதப் பொருண்மருமமே
திகழும்ராமசந் திரப்பிரமமே
யரிஹரரொன்று யமைந்தருட்குன்று
யனைத்துமாய்நின்றாய் நன்றாய்க் காண

# பஞ்சரத்தினம்.

## விருத்தம்.

சுகரொடுவாமதேவர்சூதரத்திரிவான்மீகி
யிகலறுநாரதாதியிருடியருனையிவ்வாறே
தகவுடனடைவானன்றேதவம்புரிந்தனரிவ்வேழை
பகையுடனடைந்தேனன்றேபண்டரிபுரியெம்மானே (30)

பூர்த்தியேபுகழேயாவும்பொலியவாக்கிடும்வேதாவே
காத்திடுங்கரியமாலேகடையினிலழிக்குமுக்கண்
மூர்த்தியேமுதலேயென்னைமுழுதுநீயாண்டபின்னர்
பார்த்திடுமெனையான்காணேன்பண்டரிபுரியெம்மானே (31)

எந்நெறியினையுள்ளோருமீரிருமறைவல்லோரு
நன்னெறியெனுமெய்ஞ்ஞானநவநவகாக்ஷிப்பேறு
மிந்நெறியதினிர்வாணமெய்துவரல்லாற்பொய்சேர்
பன்னெறிகளிலஃதுண்டோபண்டரிபுரியெம்மானே (32)

போக்கியஜனனந்தோறும்புல்லறிவினனுமென்னைத்
தாக்கியமனமாமாயைதன்றொழிலறவேமாய்த்து
நோக்கியநோக்காலிந்நாளுவலருமறிவாய்வைக்கப்
பாக்கியமென்செய்தேனோபண்டரிபுரியெம்மானே (33)

திகழொளிமலையேயுன்னைத்தேர்ந்திடினூசிநாட்டத்
தருமிடமில்லாதெங்குந்தங்கியவகண்டானந்த
மிகுங்கடலாவாயென்னைவிழுங்கியவெளியாமுன்சீர்
பகரவுமினிவாயுண்டோபண்டரிபுரியெம்மானே (34)

டோம்ரி தரு.

17. நாமரூபங்களனந்தங்களாயுள்ள
நாதனே நானுன்னைத்தானே
பாமரனயிதுகாறுமறிவில்லாமற்
பகைமையாய்ப்பார்த்திருந்தேனே

18. பரமசிவனுநீயும்வேறுவேறென்றெண்ணிப்
படிக்கும்படிப்பூடைப்படிப்பே
திரஞானத்தாலெல்லாநீயாய்நீயெல்லாமாய்த்
தெரியாததஞ்ஞானநடிப்பே

19. ஐயோவென்னவிவேகத்தாலேயித்தனைநாளா
யவலமாய்வாழ்ந்திருந்தேனே
பொய்யோவதுவுமுன்றன்பூரணக்கிருபையாற்
போனவழியறிந்திலேனே

20. இனியிந்தநாயேன்செய்யிழிவாங்குறைகளெல்லா
மெண்ணுமற்பொறுத்தாளுவாயே
தனிமையாம்பொருளேயுன்னந்தரங்க
வடியார்தம்மிலென்றனையுஞ்சேர்ப்பாயே.

ராம ராம ராமா.

வசனம்.

இப்படியென்று, இறைஞ்சிநின்று, இதயமுருக, இருகண்களினு நீர் பெருகப், புளகிதசரீரனுகிப் புகழ்ந்து, போதமேலீட்டாற் பூதலவாழ்க்கையையிகழ்ந்து,மகிழ்ந்துமகிழ்ந்தாடுகின்ற பரமபுண்ணியனுகிய நரஹரியைக் கருணாரஸபரிபூரணனுகிய முரஹரி மோதமுடன்கண்டு, முகங்குளிரப் புன்னகைகொண்டு,

விருத்தம்.

நின்மலமாமெனதுசிவரூபந்தன்னை
நீதியுடனீதினமுகினைத்தோயாமற்
பன்மலராற்பன்முறையாராதித்துற்ற
பாக்கியத்தாற்றிரிகரணபரிசுத்தத்தா
லன்னியமேதுங்கருதாப்பகவற்பக்தனுகிய
வுன்றன்பெருமையறிந்துனக்கு
நன்னிலையாமறிவரியவகண்டஞான
நாட்டமுண்டாக்கும்பொருட்டிங்கலஞ் செய்தேனே

22-வது கீர்த்தனை இராகம் சஹானா ஆதிதாளம்.

பல்லவி.

அறிந்துக்கொள் ளப்பாவொப்பா.

யறிந்துக்

அநுபல்லவி.

பிறந்திறந்தலையாப் பேறிதுவேநிலையா.

யறிந்துக்

சரணங்கள்.

1. மந்தமதியுடைய மனிதரறிவடைய
விந்தநாமரூபங்க ளெய்துவேனீதிலங்க

யறிந்துக்

2. களங்கமிற்சிவன்றானுங் கஞ்சபவனுநானும்
விளங்குமுத்தொழிலாலே வேறுவேறென்னுநூலே

யறிந்துக்

3. பாமரமறப்போக்கிப் பரஞ்சுடராயுண்ணோக்கி
ராமசந்த்ர தாசனை ரக்ஷித்திடமீசனை

யறிந்துக்

வசனம்.

வாருமப்பாநரஹரியே, இஃதன்றியும், பூர்வகாலத்தில் அத்திரிமஹாமுனியானவர் புத்திரார்த்தியாய்ச் சகத்காரணவஸ்துவாகிய ஸர்வேஸ்வரன்றனக்குப்பிரத்தியக்ஷமாக வேண்டுமென்று தவஞ்செய்ய, நான் ஹரிஹரஹிரண்யகர்ப்பரூபங்களோடே அந்தமுனிவருக்குத்தரிசனங்கொடுக்க,

சுலோகம்.

"விஸ்வோத்பவஸ்திதிலயேஷு-விபஜ்ய மாகைர் மாயாகுணைரநுயுகம் விக்ருஹீததேஹா:, தேப்ரம்ஹவிஷ்ணுகிரிசா: ப்ரணதோஸ்ம்யஹம்வஸ் தேப்ய: கயேவபகவாங்மயிஹோபஹூத:, ஏகோமயேஹபகவாங்விபுதப்ரதாநைச்சித்திக்ருத: ப்ரஜநநாயகதந்நுயூயம், அத்ராகதாஸ்தநுப்ருதாம்மநஸோபிதூரா ப்ரூதப்ரஸீததமஹாநிஹவிஸ்மயோமே"

இதன்பொருள்.

பிரபஞ்சத்தினுடைய சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களிலேற்படுத்தப்பட்ட பிரக்ருதிகுணங்களால் யுகயுகத்தில் ப்ரம்ஹவிஷ்ணு சிவரூபங்களைப் பரிக்கிரஹிக்கும் உங்களைக்குறித்து வந்தனஞ்செய்கின்றேன். உங்கள் மூவரில் புத்திரார்த்தியாகியவென்னால் அழைக்கப்பட்டவனெவன்? மனதிற்குவிஷயமாகாதநீங்கள் மூவரும் வருவதற்குக்காரணம்யாது? எனக்காச்சரியமாகின்றது, என்று அத்திரிமுனிவர் திரிமூர்த்திகளைக் கேட்டனர்' என்பதாம்.

அவ்வார்த்தைகளைச்செவியுற்று.

சுலோகம்.

"யதாக்ருதஸதே ஸங்கல்போ பாவ்யந்தேநைவநாந்யதா, ஸத்ஸங்கல்பஸ்யதேப்ரம்ஹந் யத்வைத்யாயதித்வயம்"

இதனபொருள்.

உனது ஸங்கற்பத்திற்கன்யதாயாதும் நடவாது ஸற்சங்கற்பமுடையவுன்னாலே தியானிக்கப்பட்ட ஜகதீஸ்வராக்யதத்துவமே மூவராயிருக்கின்றோம், என்று திரிமூர்த்திகள் அத்திரிமுனிவருக்குச் சமாதானம் புகன்றனர், என்பதாம.

அதாவது,

நான்ஹரி, ஹர, ஹிரண்யகர்ப்பரூபங்களோடே அம்முனிக்குத் தரிசனங்கொடுக்க, அவர் நானொருதேய்வத்தைப் பிரார்த்திக்க நீங்கள் மூவரும்பிரத்திய க்ஷமாவதற்குக் காரணம்யாதென்று வினவ, எங்கள் மூவருக்கும் பேதமேயில்லை, எங்கட்குத்திவ்யாத்மஸ்வரூபம் அபின்னமாய். ரூபங்கள் பின்னமாயிருக்கும் ஆதலால், நாங்கள்மூவரும் உன்னாற்பிரார்த்திக்கப்பட்ட வொருதெய்வமேயன்றி மூன்றுதெய்வங்களல்லம், என்றவருக்குச் சமாதானமுரைத்து, அம்முனியின்மனோரதத்தையறிந்து, எங்கள்மூவருடைய அம்சங்களினால் உனக்கு மூவர்புத்திரர்களுதிப்பார்களென்று அநுக்கிரஹித்தேன் பின்னர், அத்திரிமுனிக்கு மும்மூர்த்திகளுடைய அம்சங்களினால், தத்தாத்திரேயதூர்வாஸ, சந்திரர்கள் புத்திரராயுற்பவித்தனர்.

இந்த இதிஹாஸத்தை, நீகேட்டறிந்திலாயோவென்று திருவாய்மலர்ந்தருளிய பெருமைபொருந்திய பகவானது திருவாக்கியத்தைச் சிரவணானந்தமாகக்கேட்டு, பரமசுத்தனாகிய நரஹரிபத்தன் கரகமலங்களைச்சிரமீதிற்சேர்த்து, கண்ணீர் விட்டார்த்து.

விருத்தம்.

பூரணனேபுரஹரனேமுரஹரனேகருணைமழைபொழியும்வானே
காரணனேகருமுகிலேகண்ணுதலேவிண்ணதிசேகரனேமாலே
யாரணனேயகிலமுமாயல்லவுமாயுள்ளவருமகண்டவாழ்வே
நாரணனேநானினிமேற்றன்னியனானேனெனவேநவிலுவானே 36

23-வது, கீர்த்தனை இராகம் தேசிகதோடி ரூபகதாளம்.

பல்லவி.

போற்றி போற்றி புவியென்றோர்த்தி
போக்குங்கீர்த்தி புனிதமூர்த்தி
போற்றி.

அநுபல்லவி.

சாற்றும்பேயெனச் சலிக்குமென்மனச்
சழக்கறுத்தோனே கோனே.
போற்றி.

சரணங்கள்.

1. ஜனனமரண வாதனைநீங்கச்
சகலமுநீயெனும்போதமுள்ளோங்க
வனகனேயெனை யாட்கொண்டாயுனை
யறிவாராரருளே தெருளே
போற்றி.

2. அருணகோடிதேஜனே யென்றன்
ஐயனேதய்யனேமெய்யனேயுன்றன்
கருணையாலுய்யும் கசடனேன்செய்யும்
கைம்மாறென்றறியேன் சிறியேன்.
போற்றி.

3. ஆகமினிவாராவகை செய்தாய்
அடியவன்மீதுன்னருண்மழைபெய்தாய்
ராகவிதூர மோகனாகார
ராமசந்திரனே பரனே.
போற்றி.

தோரா தரு.

14. இந்த விதம்புகழ்ந்தெம்பிறைவனருகிலடைந்
திறைஞ்சியெழிலிடையின்மீது
சொந்தமுடனேநரஹரியனைஞானனைச்
சுகமுறச்சமர்ப்பிக்கும்போது

15. நன்றுநன்றெனச்சரிப்பநம்படியருளுட
னரணனணிந்துக்கொண்டானே
இன்றெனதாண்டவனிதயமிரங்கியதென்
றினியவணிகனுஞ்சொல்வானே.

விருத்தம்.

பத்தர்களுஞ்சித்தர்களும் பலசமயவாதிகளும்பரனேயுன்னை, யித்தகையோனென்றிசைத்தற் கேலாமலிறுதியினீ யெதினுந்தோயா, வத்துவிதப்பொருளெனவேயரைந்ததையுந் துறந்துமராவாரென்னிற்,சித்தமறியாவெளியேன் றெரிந்துரைக்குந்திறமுளனோதேவதேவே (37)

24-வது. கீர்த்தனை இராகம் தோடி ரூபகதாளம்.

பல்லவி.

நாதாவென்றன் நீதறவுன்றன்
பாதாரவிந்தந் தாதயவாய்.

நாதா.

அநுபல்லவி.

மாதவபுராதனனே நீதமது சூதனனே

நாதா.

சரணங்கள்.

1. வேதமுடிவாகியநிஜ போதனேகுணாதீதனே
பூதலத்திப்பேதையேனைச் சோதனைசெய்யாதினிமேல்

நாதா.

2. ஆசையென்னுமோசப்பெரும்பிசாசத்தான்மொத்துண்டேசலித்தேன்
மாசறுஞ்சர்வேசனேயுன் ரூசனுக்கயோசனையோ

நாதா.

3. சந்ததமுன்சிந்தனைபுரிந் தய்ந்திடவரந்தருள்வாய்
இந்திரைநாதனேராம சந்திரனென்னுநன்னாம

நாதா.

வசனம்.

இவ்வாறு சந்தோஷசித்தனாகிய வர்த்தகன் சகலலோக கர்த்தனாகிய ஜநார்த்தனனை அத்தியந்தபத்தியோடே துதித்து, அவனழகிய திவ்வியஸ்வரூபத்தைத்தன்னகத்திற்பதித்து, நரஹரியைப் பெருமையுடன் மதித்து, நல்லன்பினாற்குதித்து காடாலிங்கனம்புரிந்து, கண்ணீர்சொரிந்து,

25-வது கீர்த்தனை இராகம் சாவேரி திரிபுடைதாளம்.

பல்லவி.

உன்றனாலன்றோ நான்றானே
யுத்தமபத்த னானேனே

யுன்றனா.

அநுபல்லவி.

நன்றறிந்தில்லா நாயினேன்பொல்லா
நாணந்தீர்த்தன்பை நாட்டும் கூட்டும்

உன்றனா.

சரணங்கள்.

1. ஆதியிற்றீதாமென்வந்தை யாலுனையேதேதோநிந்தை
யோதினேனையோவுன்சிந்தை யொத்ததேமெத்தவும்விந்தை

யுன்றனா.

2. சிறியாரெப்போதுந்தீது செய்யினுஞ்சீற்றங்கொள்ளாது
பொறுப்பாரல்லோமண்மீது புண்ணியராவாரிப்போது

உன்றனா.

3. நேமமாயிவ்வரைஞான்போலே நேர்த்தியானதின்றென்றன்னாலே
ராமசந்த்ர னிடையின்மேலே ரத்தியாகவணிந்தாலே

உன்றனா.

வசனம்.

இவ்வாறுபுகழ்ந்து, தனதுபாக்கியத்திற்கு மகிழ்ந்து ஸ்வாமியினாலயத்தையகன்று, ஸ்வஸ்தானத்திற்குச் சென்று, ஸகலேந்திரியங்களையும் வென்று, ஸந்மார்க்கத்தினின்று விட்டலநாதனருளினால் மட்டில்லாச்சுகமுற்றிருந்தனன்.

விருத்தம்.

பின்னுமென்னையனன்புளவடியார்
பெற்றியோர்ந்தவர்க்கநுகுணமாய்
நன்னெறியொழுகுநண்பனுதலினந்
நாண்முதனரஹரிக்காகத்
தன்னெழிற்சிரமேற்பாணலிங்கம்போற்
றயங்குமோர்பொன்முடிபுனைந்து
மன்னுமிந்நாளினளவுமேனையரு
மகிழுறத்திகழுகின்றனனே, (38)

தோரா தரு.

16. அதுமுதலாய்நரஹரியுமபேதமா
யரிஹரரூபங்களைமதித்து
இதயமகிழ்ந்தாராதனந்தினந்தின
மிடையறாதியற்றித்துதித்து

17. இகசுகங்களனுவளவாயினுந்தன
திதயமுறாதொளிமன்ன
அகிலஜனங்களும்பண்டரிநாதனுக்
கந்தரங்கபக்தனென்ன

18. வெய்யதாகும்பவவேலையினிடையினி
வீழ்ந்தொருபோதினும்வருந்தான்
மெய்யடியாருடன்மேதினிமீதினின்
மேன்மையாகவாழ்ந்திருந்தான்.

ராம ராமா.

# மங்களம்.

26-வது கீர்த்தனை இராகம் சுருட்டி ஆதிதாளம்,

பல்லவி.

மங்களம் பாண்டு ரங்க பவபங்க
மங்களம்

அநுபல்லவி.

பங்கஜாக்ஷ கன பாபவிமோசன
மங்களம்,

சரணங்கள்.

மங்களமறைமுடி மருவுமநாதி
மங்களமகண்டசின் மயசுயஞ்சோதி
மங்களம்பரம மௌனிஜனோத்தம
மாஸோப்ஜநிலய மாதவாநந்த ஜய
மங்களம்.

மங்களமதிம்ருது மதுரஸம்பாஷா
மங்களமதுலித மணிமயபூஷா
மங்களம்ஸுகர மாரகோடி ஸுந்தர
மாயாந்தகாராதப மாருதிநுதசுப,
மங்களம்.

மங்களம்ருக்மிணீ மனோஹரவேஷா
மாசறும்ராமசந்த்ர தாஸஸந்தோஷா
மங்களம்ஸுகுண மாதங்கபோஷண
மங்களம்வரஸத்ய மாதுராவனேநித்ய.
மங்களம்.

4878

வாழிவிருத்தம்.

பன்னுமாமறைகள்வாழி பண்டரிநாதன்வாழி
யன்னையாயென்னையாண்ட வச்சுதானந்தன்வாழி
மன்னுநல்லடியார்வாழி மாநிலமனைத்தும்வாழி
பொன்னகர்வாழியிந்தப் பொற்புறுங்கதையும்வாழி.

ஸ்ரீகாஹரிபத்தன்சரித்திரம்

முற்றிற்று.